இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான

# தேசிய ஆக்கத்திறன் விருது

# 2018



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248 1/1, காலி வீதி,
கொழும்பு-04.

எனது இல.: HA/7/56/HASC/2018
இந்துசமய கலாசார திணைக்களம்,
248 1/1, காலி வீதி,
கொழும்பு-04.
2018.03.20

அனைத்து இந்து சமய அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர்கள் / ஆசிரியர்கள்.

## இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது – 2018

இலங்கையில் இந்துசமய அறநெறிக் கல்வியை மேலும் மேம்படுத்தி முன்னேற்றும் நோக்கில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்துசமய அறநெறிக்கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களினது ஆக்கத்திறன்களை வெளிக் கொணர்வதற்கான களம் அமைத்து அவர்களை பாராட்டி ஊக்கப்படுத்துதல் புதிய இந்து சமய அறநெறிக் கல்வித் திட்டத்தின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றாகும். இந்துசமய அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் தங்களது ஆக்கத்திறன்களை வெளிக்கொணர்வதற்குகளம் அமைத்துக்கொடுக்கும் நோக்குடன்தேசிய ஆக்கத்திறன் விருது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விருது ஒவ்வொரு வருடமும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்துசமய அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் தங்களது ஆக்கத்திறன்களை வெளிக்கொணர்வதற்கு இந்துசமய அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களும், ஆசிரியர்களும் மாணவர்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும்.அந்த வகையில் பின்வரும் விதிகளுக்கு அமைவாக மாணவர்களது ஆக்கத்திறன் வெளிப்பாடுஅமைதல் வேண்டும்.

### தெரிவு நடைபெறும் மட்டங்கள்

இந்துசமய அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் இவ் ஆக்கத்திறன்களை வெளிக்கொணரும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு அமைவாக முதற்கட்டமாக இந்துசமய அறநெறிப் பாடசாலை மட்டத்தில் இந் நிகழ்வுகள் நடைபெறும். அடுத்து பிரதேச மட்டத்திலும் அதனைத் தொடர்ந்து மாவட்ட மட்டத்தில் இறுதியாக தேசிய மட்டத்தில் நடைபெறும். தேசிய மட்டத்தில் ஆக்கத்திறன்களை சிறப்பாக வெளிக்காட்டுபவர்களிற்கு தேசிய ஆக்கத்திறன் விருதும் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கப்படும். தேசிய மட்டத்தில் பங்குபற்றி 60 புள்ளிகளிற்கு மேல் பெறும் மாணவர்களுக்கு தேசிய மட்டத்தில் விசேட பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். மாவட்ட, பிரதேச மட்டங்களில் ஆக்கத்திறன்களை சிறப்பாக வெளிக்காட்டுபவர்களிற்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்துசமய அறநெறிப் பாடசாலை மட்டத்தில் ஆக்கத்திறன்களை சிறப்பாக வெளிக்காட்டுபவர்களிற்கு *இந்துசமய அறநெறிப் பாடசாலைகளினால்* பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இவ் ஆக்கத்திறன் நிகழ்வுகளில் சிறப்பாக ஈடுபடும் இந்துசமய அறநெறிப்பாடசாலைகள் மற்றும் அதன் பொறுப்பாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களை இனங்கண்டு ஒவ்வொரு வருடமும் பாராட்டுவதற்கும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

## 1. இந்து சமய அறநெறிப் பாடசாலை மட்டம்

1.1. சகல இந்துசமய அறநெறிப் பாடசாலைகளிலும் ஆக்கத்திறன் தெரிவுகள் நடைபெறுதல் வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை மேற்படி அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர்களே மேற்கொள்ளல் வேண்டும்.

1.2. அனைத்து இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களும் ஆக்கத்திறன்களில் ஈடுபடச் சந்தர்ப்பமும் ஊக்கமும் வழங்கப்பட வேண்டும். இந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் ஆக்கத்திறன் விருது தொடர்பான விபரம் தெரியப்படுத்த வேண்டும்.

1.3. ஆக்கத்திறன் நிகழ்வானது அறநெறிக் கல்வித் திட்டத்தின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றாகும். அறநெறிப் பாடசாலை மட்டத்தில் மேற்படி ஆக்கத்திறன் நிகழ்வுகள் நடாத்தப்படாதவிடத்துஇணைப்பாடவிதான செயற்பாடு பாதிக்கப்படுமாதலினால் இவ் ஆக்கத்திறன் நிகழ்வுகளில் மாணவர்கள் பங்குபற்றுதல் மிகவும் முக்கியமான விடயமாகக் கருதப்படல் வேண்டும்.

1.4. அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர்கள் தமது அறநெறிப் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற எழுத்தாற்றல்(கட்டுரை),பேச்சாற்றல்(பேச்சு), சித்திரம்,கதாப்பிரசங்கம் தொடர்பான தனி ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களை விண்ணப்பப்படிவத்தில் பதிந்து பிரதேச மட்டத்தெரிவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

1.5. அறநெறிப் பாடசாலை மட்டத்தில் நாடகம், பண்ணிசை, வில்லிசை மற்றும் நடனம் ஆகிய குழு நிகழச்சிகளுக்கு அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களைத் தெரிவுசெய்து விண்ணப்பிக்கவேண்டும். (விண்ணப்பிக்கும் மாணவர்களே தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்ற முடியும்).

1.7. இந்துசமய அறநெறிப் பாடசாலை மட்ட நிகழ்வுகள் யாவும் 2018.04.30ஆம் திகதிக்கு முன் நடாத்தி முடிக்கப்படவேண்டும். நிகழ்வுகள் நடாத்தி முடித்த பின்னர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து 31.05.2018ற்கு முன்னர் **"பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1, காலிவீதி, கொழும்பு-04"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்ககுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1.8. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"தேசிய ஆக்கத்திறன் விருது-2018"**என குறிப்பிடப்படல் வேண்டும். குறித்த காலத்திற்குள் கிடைக்கப் பெறாத விண்ணப்பப் படிவங்கள் தேசிய ஆக்கத்திறன் விருதிற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

2. **பிரதேசமட்டத்தில் நடைபெறும் நிகழ்வுகள்**

2.1. இந்துசமய அறநெறிப் பாடசாலை மட்டத்தில் தனி நிகழ்வுகளான எழுத்தாற்றல்(கட்டுரை),பேச்சாற்றல்(பேச்சு), கதாப்பிரசங்கம், சித்திரம் என்பவற்றில் அதி உச்ச திறமைகளை வெளிக்காட்டும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களும், குழு நிகழ்வுகளானநாடகம், பண்ணிசை, வில்லிசை மற்றும் நடனம் என்பவற்றிற்கான பிரதேச மட்டத்தெரிவு இடம்பெறும். பிரதேச மட்டத்தில் முதல் மூன்று இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அதில் **முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகள் மட்டும் மாவட்ட மட்டத்தெரிவிற்கு தகுதியுடையது ஆகும்.**

2.2. பிரதேசமட்டநிகழ்வுகள்பின்வரும் திகதிகளில் நடைபெறவேண்டும்.

* பேச்சாற்றல்(பேச்சு),சித்திரம், எழுத்தாற்றல்(கட்டுரை)- **23.06.2018.**
  கதாப்பிரசங்கம்

* வில்லுப்பாட்டு, நடனம், பண்ணிசை, நாடகம் - **24.06.2018.**

3. **மாவட்ட மட்டத்தில் நடைபெறும் நிகழ்வுகள்.**

பிரதேச மட்டத்தில் அதி உச்ச திறமைகளை வெளிக்காட்டும் முதல் இடம்பெற்றமாணவர்/குழுக்கள் மாவட்ட மட்ட நிகழ்வுகளில் பங்குகொள்ள வேண்டும். மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்கள் தெரிவுசெய்யப்பட்டும். இத்தெரிவு நாடுமுழுவதும்பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

* பேச்சாற்றல்(பேச்சு),நாடகம், நடனம், பண்ணிசை, வில்லுப்பாட்டு
  கதாப்பிரசங்கம். – **28.07.2018.**

4. **தேசிய மட்டத்தில் நடைபெறும் நிகழ்வுகள்**

4.1. ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலிடம் பெற்ற பேச்சாற்றல்(பேச்சு), கதாப்பிரசங்கம்,நாடகம்,நடனம், பண்ணிசை, வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்வுகள் தேசிய மட்டத்தில் பங்குபற்ற வேண்டும். இந்நிகழ்வு **செப்ரம்பர் 22ந் திகதி** நடைபெற்று முதல் மூன்று இடங்கள் தெரிவு செய்யப்படும்.

4.2. மேற்படி ஒழுங்கில் ஒழுங்கமைக்கப் பட்டிருப்பினும் நடைபெறும் இடம், நேரம் என்பவை பத்திரிகை, தொலைபேசி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக அறிவிக்கப்படும்.

# 1. தனி நிகழ்வுகள்

**(1) எழுத்தாற்றல் (கட்டுரை)**

- இந்துசமய அறநெறிப் பாடசாலை மட்டத்தில் வகுப்பு 1தொடக்கம் 11ஆம் வகுப்பு மாணவர்கள் வரை பங்குபெறவைத்துமாணவர்களதுஎழுத்தாற்றலை(கட்டுரை) மதிப்பிட்டு திறமைகளை வெளிக்காட்டும் முதல் மூன்றுமாணவர்களை மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

- பிரதேச மட்ட ஆக்கத்திறன்களை மதிப்பிடுதல்ஆரம்பிப்பதற்கு முன்னர் மண்டபத்தில் வைத்து தலைப்பு வழங்கப்படும்.

- மண்டபத்தில் வழங்கப்படும் தலைப்பிற்கு அமைவாக கட்டுரை எழுதுதல்வேண்டும்.

- கட்டுரைகள் இந்து சமய கலை, கலாசார, சமூக மேம்பாடு, ஒழுக்க விழுமியங்கள், அறம், அன்பு, நாயன்மார்களின் வரலாறு, விரதங்களும் பண்டிகைகளும் சமூக மேம்பாடு, இயற்கையைப் பேணல் போன்ற ஏதாவது ஒரு பொருளை உள்ளடக்கியதாக அமையும். ***(மேலே தரப்பட்டவை தலைப்புக்கள் அல்ல என்பதை கவனத்தில் கொள்ளவும்).***

- 

| வகுப்பு | சொற்கள் |
|---|---|
| 1 | 25 |
| 2 | 30 |
| 3 | 50 |
| 4 | 75 |
| 5 | 100 |
| 6 | 125 |
| 7 | 150 |
| 8 | 175 |
| 9 | 200 |
| 10 | 250 |
| 11 | 300 |

இது பிரதேச மட்டத்தில் **23.06.2018 ஆந் திகதி நடைபெறும்.**

**(2) பேச்சாற்றல் (பேச்சு)**

- இந்துசமய அறநெறிப் பாடசாலை மட்டத்தில் வகுப்பு 1தொடக்கம் 11ஆம் வகுப்பு மாணவர்கள் வரை பங்குபெறவைத்துமாணவர்களது பேச்சாற்றலை (பேச்சு) மதிப்பிட்டு திறமைகளை வெளிக்காட்டும் முதல் மூன்று மாணவர்களை மாத்திரமேபிரதேச மட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

* கீழ்வரும் தலைப்புகளில் பேச்சுகள் அமைதல் வேண்டும்.

வகுப்பு 1 –எனது பெற்றோர்
வகுப்பு 2 –விநாயகர்
வகுப்பு 3 –திருஞானசம்பந்தர்
} 3நிமிடம்

வகுப்பு 4 –சிவராத்திரி
வகுப்பு 5 –நவராத்திரி
வகுப்பு 6 –தைப்பொங்கல்
} 5நிமிடம்

வகுப்பு 7 –நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்
வகுப்பு 8 – பிற உயிர்களை பேணுவோம் } 7நிமிடம்
வகுப்பு 9 – இயற்கையைப் பேணுவோம்

வகுப்பு 10 – ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சமய சமூக பணிகள்/
சுவாமி விபுலானந்தரின் சமய சமூக பணிகள். } 10 நிமிடம்
வகுப்பு 11 –திருக்குறள் கூறும் அற வாழ்வு.
இந்து அறநெறிக்கல்வியின் முக்கியத்துவம்.

**பிரதேச மட்டம் - 23.06.2018**
**மாவட்ட மட்டம் - 28.07.2018**
**தேசிய மட்டம் - 22.09.2018**

**(3) சித்திரம்**

- இந்துசமய அறநெறிப் பாடசாலை மட்டத்தில் வகுப்பு 1தொடக்கம் 11ஆம் வகுப்பு மாணவர்கள் வரை பங்குபெறவைத்துமாணவர்களது சித்திரம் மதிப்பிட்டு திறமைகளை வெளிக்காட்டும் **முதல் மூன்று மாணவர்களை மாத்திரமே**பிரதேச மட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

* இந்து சமய கலை கலாசார பண்பாட்டு ஒழுக்க விழுமிய கருத்துக்களை பிரதிபலிக்கும் வகையில் விடயத் தலைப்பு வழங்கப்படும்.
* சித்திரங்கள் A4 அளவுடைய தாளில் வரையப்படல் வேண்டும்.
* வரைதலுக்குரிய பென்சில், வண்ணம் தீட்டும் பொருட்கள் போன்றவை மாணவர்கள் கொண்டு வருதல் வேண்டும்.
* சித்திரம் வரைதல் தொடர்பான மேலதிக விபரங்களும்,வரையப்பட வேண்டிய விடயம் என்பன மண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

**பிரதேச மட்டம் - 23.06.2018**

**(4) கதாப்பிரசங்கம்**

- இந்துசமய அறநெறிப் பாடசாலை மட்டத்தில் வகுப்பு 1தொடக்கம் 11ஆம் வகுப்பு மாணவர்கள் வரை பங்குபெறவைத்துமாணவர்களது மதிப்பீட்டு திறமைகளை வெளிக்காட்டும் ஒரு மாணவர் மாத்திரமே ஒவ்வொரு வகுப்பிலும் பிரதேச மட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பின்வரும் விடயங்களை ஏதாவதொன்றை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

* நாயன்மார்களின் பக்தி.
* அன்பு, அறநெறி, உண்மை, பொய் சொல்லாமை போன்ற ஒழுக்க விழுமியங்களை வெளிப்படுத்தும் புராணக் கதைகள்.
* அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் இன்றைய நாட்களில் ஒழுக்க விழுமிய நிலை, ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தல்.
* இந்து சமய கலாசார பண்பாட்டை வெளிப்படுத்தும் கதை.

வகுப்பு 1,2,3 - 5 நிமிடங்கள்.

வகுப்பு 4,5,6 - 10 நிமிடங்கள்

வகுப்பு 7,8,9 - 12 நிமிடங்கள்

வகுப்பு 10,11 - 15 நிமிடங்கள்

**பிரதேச மட்டம் - 23.06.2018**
**மாவட்ட மட்டம் - 28.07.2018**
**தேசிய மட்டம் - 22.09.2018**

# 11. குழு நிகழ்வுகள்

**(5) பரதநாட்டியம் (குழு)**

* முறையாக பரதம் கற்கும் மாணவர்கள் இதற்கு தகுதி உடையவர்களாவார்கள்.
* 1ம் வகுப்பு தொடக்கம் 11ம் வகுப்பு வரை (குழு) மாணவர்களை உள்ளடக்கி ஒரு அறநெறிப் பாடசாலையிலிருந்து ஒரு குழுவினர் மட்டும் பங்குபற்ற முடியும்.
* ஒரு குழுவில் 3மாணவர்கள் குறையாமல் 12 மாணவர்கள் மேற்படாமலும் அமைய வேண்டும்.
* நடனங்களுக்குரிய பாடல்கள் இறுவட்டு (CD) மூலம் வழங்கப்படும். அவற்றிலிருந்து ஒன்றை தெரிவு செய்து தயார்படுத்தல் வேண்டும்.

**பிரதேச மட்டம் - 23.06.2018**
**மாவட்ட மட்டம் - 28.07.2018**
**தேசிய மட்டம் - 22.09.2018**

**(6) நாடகம் -** (20 நிமிடங்கள்)

- 1ம் வுகுப்பு தொடக்கம் 11 ஆம் வகுப்புவரை (குழு) மாணவர்களை உள்ளடக்கி ஒரு அறநெறிப் பாடசாலையிலிருந்து ஒரு குழுவினர் மட்டும் பங்குபற்ற முடியும்.
- ஒரு குழுவில் வாத்தியம் வாசிப்பவர்கள் உட்பட 7 மாணவர்களிற்கு குறையாமலும் 15 மாணவர்களிற்குமேற்படாமலும் இடம்பெறுதல் வேண்டும்.
- நாடகத்தின் கதை பின்வரும் விடயங்களில் ஒன்றை சித்தரிப்பதாக அமைதல் வேண்டும்.
    * நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு கூறும் கதைகள்.
    * புராணக்கதை வாயிலாக இறைவன் கருணை.
    * அறநெறி/ஒழுக்க விழுமிய கருத்தினை வலியுறுத்தும் விடயங்களைக் கொண்ட கதை.
    * இந்து சமய கலாசார பண்பாட்டை வெளிப்படுத்தும் கதை.

**பிரதேச மட்டம் - 23.06.2018**
**மாவட்ட மட்டம் - 28.07.2018**
**தேசிய மட்டம் - 22.09.2018**

**(7) பண்ணிசையும் பஜனையும் (குழு)** –(30 நிமிடங்கள்)

- 1ம் வகுப்பு தொடக்கம் 11 ஆம் வகுப்புவரை (குழு) மாணவர்களை உள்ளடக்கி ஒரு அறநெறிப் பாடசாலையிலிருந்து ஒரு குழுவினர் மட்டும் பங்குபற்ற முடியும்.
- ஒரு குழுவில் 15 மாணவர்களிற்கு குறையாமலும் 25 மாணவர்களிற்கு மேற்படாமலும் இடம்பெறுதல் வேண்டும்.
- இசைக்கப்படவேண்டிய பண்ணிசை மற்றும் பஜனைப் பாடல்கள் திணைக்களத்தால் இறுவட்டு (CD) மூலம் அறநெறிப்பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும். அவற்றிலிருந்து ஒரு தொகுதியைத் தெரிவுசெய்து அதில் உள்ள முழுப் பாடல்களையும் மனனஞ் செய்தல் வேண்டும். தெரிவு செய்த தொகுதியிலிருந்து நடுவர்களால் கோரப்படும் பாடல்களைப் பாடுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

**(8) வில்லுப்பாட்டு** –(20 நிமிடங்கள்)

- 1ம் வகுப்பு தொடக்கம் 11 ஆம் வகுப்புவரை (குழு) மாணவர்களை உள்ளடக்கி ஒரு அறநெறிப் பாடசாலையிலிருந்து ஒரு குழுவினர் மட்டும் பங்குபற்ற முடியும்.
- ஒரு குழுவில் 7 மாணவர்கள் பங்குபற்றுதல் வேண்டும்.

பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றாக அமைதல் வேண்டும்.

* நாயன்மார்களின் பக்தி.

* அன்பு, அறநெறி, உண்மை, பொய் சொல்லாமை போன்ற ஒழுக்க விழுமியங்களை வெளிப்படுத்தும் புராணக் கதைகள்.

* அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் இன்றைய நாட்களில் ஒழுக்க விழுமிய நிலை, ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தல்.

* இந்து சமய கலாசார பண்பாட்டை வெளிப்படுத்தும் கதை.

| | | |
|---|---|---|
| **பிரதேச மட்டம்** | **-** | **23.06.2018** |
| **மாவட்ட மட்டம்** | **-** | **28.07.2018** |
| **தேசிய மட்டம்** | **-** | **22.09.2018** |

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார திணைக்களம்,
248 1/1, காலி வீதி,
கொழும்பு-04

1. அனைத்து மாவட்ட செயலர்கள்.
2. அனைத்து பிரதேச செயலர்கள்.
3. அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (இந்துசமய கலாசாரம்)